தினமணி

மஞ்சள் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

First Published : 12 May 2010 11:26:06 AM IST
Last Updated : 12 May 2010 12:10:49 PM IST

பெரம்பலூர், மே 11: மஞ்சள் கொள்முதல் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், மஞ்சள் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும், அறுவடைக்கு ஆள் கிடைக்காமலும், மஞ்சளைப் பதப்படுத்த ஸ்டீமர் இல்லாததாலும், வேளாண்மைத் துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெருமளவில் வானம் பார்த்த, மானாவாரி நிலங்களைக் கொண்ட பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி, மக்காசோளம், வெங்காயம் உள்ளிட்ட பயிர்களை அதிகளவு பயிரிட்டு வந்த விவசாயிகள் தற்போது, நிகழாண்டு மஞ்சளின் மகத்துவம் அறிந்து மஞ்சள் சாகுபடியில் தீவிரக் கவனம் செலுத்தி வருகின்றனர்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு, பருத்தி சாகுபடியில் தமிழகத்தில் இரண்டாவது இடத்தில் இருந்த பெரம்பலூர் மாவட்டம், போலி விதைகளாலும், போதிய மழை இல்லாததாலும் 2005 ஆம் ஆண்டில் பருத்தி விவசாயிகளுக்கு பல கோடி ரூபாய் மகசூல் இழப்பு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, மாற்றுப் பயிராக மக்காசோளம் சாகுபடி செய்யத் தொடங்கினர். இதனால், தமிழகத்திலேயே மக்காசோளம் சாகுபடியில் பெரம்பலூர் மாவட்டம் முதலிடத்தைப் பிடித்தது. ஆனால், மாவட்டத்தில் நிலவிய கடும் வறட்சியால் மகசூல் பாதிப்பு, எதிர்பார்த்த விலை இல்லாததால், மக்காசோளத்தையும் புறக்கணிக்கத் தொடங்கினர்.

இந்நிலையில், கடந்த ஆண்டு ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.7 ஆயிரம் வரை கொள்முதல் செய்யப்பட்டதால், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேப்பந்தட்டை, எசனை, நெற்குணம், மளையாளப்பட்டி, வேப்பூர் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இதன் காரணமாக, கடந்த 2008 ஆம் ஆண்டைவிட நிகழாண்டு சுமார் 700 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி கூடுதலாகச் செய்யப்பட்டு, தற்போது அறுவடை சீசன் நடைபெற்று வருகிறது.

மஞ்சள் அறுவடை தொடங்கி, ஓரிரு வாரத்திலேயே அதன் கொள்முதல் விலையும், கடந்த ஆண்டைக் காட்டிலும், நிகழாண்டு இரு மடங்காகி உள்ளது. தற்போது, ஈரோடு மாவட்ட மஞ்சள் மண்டியில் ஒரு குவிண்டால் ரூ.17,940-க்கு கொள்முதல் செய்யப்படுவதாக கூறும் விவசாயிகள், வறட்சி அதிகமானால் இன்னும் கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்ய வாய்ப்புள்ளதாக மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

மஞ்சள் கொள்முதல் விலை உயர்வு, ஒருபுறம் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்தாலும், மஞ்சளை வெட்டி எடுக்க ஆள் கிடைக்காமலும், வெட்டி எடுக்கப்பட்ட மஞ்சள் கிழங்குகளை நீராவியில் அவித்து பதப்படுத்தும் ஸ்டீமர் எனப்படும் நீராவி இயந்திரம் இல்லாததாலும் அவதிப்பட்டு வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

மஞ்சள் பதப்படுத்தும் நீராவி இயந்திரங்கள் சேலம் மாவட்டத்தில் இருந்து, வாடகைக்கு கொண்டு வரும் சூழ்நிலையில், உரிய நேரத்தில் வாடகை இயந்திரம் கிடைக்காமலும், வாடகை கட்டணம் இரு மடங்கு தரும் நிலையிலும் உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

மேலும், தமிழக அரசு வேளாண் துறை மூலம் மானிய விலையில் மஞ்சளை பதப்படுத்தும் ஸ்டீமர் இயந்திரம், மஞ்சள் அறுவடை இயந்திரம் ஆகியவற்றை வழங்கி, மஞ்சள் பதப்படுத்தும் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தால், பெரம்பலூர் மாவட்டத்தில் மஞ்சள் உற்பத்தி அதிகரிக்கும் என்று கூறுகின்றனர்.

இதனிடையே, மஞ்சள் கொள்முதல் விலை உச்சத்தில் உள்ளதால் பருத்தி, மக்காசோளம், வெங்காயம் உள்ளிட்ட பயிர்களைச் சாகுபடி செய்த விவசாயிகள், வரும் ஆண்டில் மஞ்சள் சாகுபடி செய்யத் தயாராகி வருகின்றனர். இதனால், விதை மஞ்சளுக்கும் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ ரூ.10-க்கு விற்பனை செய்யப்பட்ட விதை மஞ்சள் தற்போது, ரூ.35-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

மருத்துவ குணம் நிறைந்த, தோட்டப்பயிரான மஞ்சள் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பாசிப்பயறு சாகுபடி செய்ய அறிவுறுத்தல்**

First Published : 12 May 2010 10:56:37 AM IST

Last Updated : 12 May 2010 12:05:26 PM IST

திருச்செங்கோடு,மே 11: திருச்செங்கோடு வட்டாரத்தில் பாசிப்பயறு சாகுபடி செய்து பயன் பெறுமாறு விவசாயிகளுக்கு வேளாண். துறை அறிவுறித்தியுள்ளது.

இது குறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) ராதாமணி கூறியது:

திருச்செங்கோடு வட்டாரத்தில் தற்போது நல்ல மழை பெய்துள்ளது. இதனால் குறுகிய காலப் பயிரான பாசிப்பயறு சாகுபடி செய்தால் நல்ல வருவாய் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதை போதுமானது. விதையினை கார்பணடாசிம் அல்லது டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் விதம் அல்லது சூடோமோனாஸ் கலந்து விதைப்பு செய்யலாம்.

விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னதாக ரைசோபியம் (பயறு) மற்றும் பாஸ்போபேக்டீரியா ஆகிய உயிர் உரங்கள் 1 பாக்கெட் (200 கிராம் ) கொண்டு விதை நேர்த்தி செய்து விதைப்பு செய்யலாம். இவ்வாறு செய்வதால், விதைகள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

மேலும், பயிர் செழிப்பாகவும், பூச்சி நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியுடனும் வளரும். அடி உரமாக எக்டருக்கு 12.5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 12.5 கிலோ சாம்பல் சத்து மற்றும் ஜிப்சம் 110 கிலோவையும் இட வேண்டும் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி சுற்றுலா**

First Published : 12 May 2010 11:49:22 AM IST

திருப்பரங்குன்றம், மே 11: தோட்டக்கலை சார்பில் திருப்பரங்குன்றத்தில் இருந்து விவசாயிகள் பயிற்சி சுற்றுலா சென்றனர்.

தேசிய தோட்டக்கலை இயக்கம் 2009-2010 திட்டத்தின்கீழ் திருப்பரங்குன்றம் மற்றும் தே.கல்லுப்பட்டி பகுதியை சுற்றியுள்ள தோட்டக்கலை விவசாயிகள் 100 பேர் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் பயிற்சி பெற திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்து சுற்றுலா சென்றனர்.

நிகழ்ச்சிக்கு துணைத் தலைவர் சிவபாக்கியம் முருகன், தோட்டக்கலை துணை இயக்குநர் கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியத் தலைவர் புஷ்பலதா தனபாலன் விவசாயிகள் செல்லும் பஸ்ஸ்ஸ திங்கள்கிழமை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இச்சுற்றுலாவின் நோக்கம் குறித்து தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆர்.மோகன்குமார் கூறுகையில், மதுரை மாவட்ட ஆட்சியரின் உத்தரவுப்படி தோட்டக்கலை சாகுபடி செய்யும் விவசாயிகள் இச்சுற்றுலாவுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இச்சுற்றுலா மூலம் வீரிய ஒட்டு மா, நெல்லி மற்றும் முந்திரி உற்பத்தி செய்தல், தோட்டக்கலைப் பண்ணைகள், திசு வாழை, மற்றும் வீரிய ஒட்டுக் காய்கறிகள், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம், சொட்டு நீர்

பாசனத்தின் பயன்கன் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. தேவகோட்டை, குற்றாலம், கன்னியாகுமரி உள்பட பல்வேறு பகுதிகளில் உள்ள ஆராய்ச்சிப் பண்ணைகளுக்கு அவர்களை அழைத்துச் சென்று பயிற்சி அளிக்க உள்ளோம் என்றார்.

இச்சுற்றுலாப் பணிகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் ரா,முருகேசன், அ.பாலகிருஷ்ணன், ஆர்.சலீம்ராஜ், ஆர்.சுருளீஸ்வரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**ஆதிரங்கம் இயற்கை விவசாயப் பண்ணையில் மே 22-ல் பாரம்பரிய நெல் திருவிழா**

First Published : 12 May 2010 11:41:54 AM IST

திருத்துறைப்பூணடி, மே 11: திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரங்கம் இயற்கை விவசாயப் பண்ணையில் வரும் 22ஆம் தேதி பாரம்பரிய நெல் திருவிழா நடைபெறுகிறது.

இந்த விழாவுக்கு இயற்கை விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் தலைமை வகிக்கிறார்.

காந்தி கிராம பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் என். மார்க்கண்டன், பாரம்பரிய நெல் பிரசார ஒருங்கிணைப்பாளர் உஷா, நாகை மாவட்ட வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் சிக்கல் அ. அம்பலவாணன், விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் தலைவர் வலிவலம் சேரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன், இந்த விழாவில் கலந்து கொண்டு, 1000 விவசாயிகளுக்கு தலா 2 கிலோ விதை நெல்லை வழங்குகிறார். நிகழ்ச்சியில் இயற்கை விவசாயம் குறித்த புத்தகத்தை முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜகதீசன் வெளியிடுகிறார்.

அன்றைய தினம் மாலையில் விவசாய பேரணியும், நிறைவில் திருத்துறைப்பூண்டி தெற்கு வீதியில் பிரசார பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

விதை நெல் வாங்க விரும்பும் விவசாயிகள், கிரியேட் இயக்குநர் ஆர். ஜெயராமன், இயற்கை விவசாய பண்ணை, ஆதிரங்கம், திருத்துறைப்பூண்டி. செல் 9443320954 என்ற முகவரியில் முன்பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார் ஆர். ஜெயராமன்.

**வெங்காய ஏற்றுமதிக்கு விவசாயிகள் கோரிக்கை**

First Published : 12 May 2010 11:12:23 AM IST

பல்லடம், மே 11: வெங்காய ஏற்றுமதிக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்லடம் பகுதியில் குள்ளம்பாளையம், வாவிபாளையம், சித்தம்பலம், கேத்தனூர், கொடுவாய் உள்ளிட்ட பகுதிகளில் ஒவ்வொரு பருவமும் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது பல்லடம் பகுதியில் அறுவடை முடிந்துள்ளது. ஒரு கிலோ வெங்காயம் ரூ. 8 முதல் ரூ. 11 வரை தரம் பிரித்து கொள்முதல் செய்யப்படுகிறது.

45 நாட்கள் நாற்றங்காலிட்டு 110 நாட்களில் அறுவடைக்கு வரும் வெங்காய சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் வரை உற்பத்திச் செலவு ஆகிறது. ஏக்கருக்கு சராசரியாக 8 டன் மகசூல் கிடைக்கும் நிலையில், இந்த கொள்முதல் விலை போதுமானதாக இல்லை; குறைந்தபட்ச விலை கிலோ ரூ. 14-ஆவது இருக்க வேண்டும்.

வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைக்க, வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொங்கலூரில் அமைய உள்ள வெங்காய குளிர்பதன கிடங்கை விரைவில் கட்டி முடிக்க வேண்டும், என்று வெங்காய சாகுபடி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**விவசாய நிலங்களில் சிப்காட்: திட்டத்தை கைவிட கோரிக்கை**

First Published : 13 May 2010 05:25:46 AM IST

தருமபுரி, மே 12: நல்லம்பள்ளி ஒன்றியம், பாகலஹள்ளி ஊராட்சியில் 1,138 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் அமைக்கும் திட்டத்தை மாவட்ட நிர்வாகம் கைவிட வேண்டும் என்று அப்பகுதி விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

நல்லம்பள்ளி ஒன்றியம் பாகலஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட குரும்பட்டி, பட்டகப்பட்டி, அண்ணா நகர், கொட்டாவூர் உள்ளிட்ட 7 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் சார்பில் விவசாய நிலங்களில் சிப்காட் அமைக்கும் நடவடிக்கை குறித்த கலந்தாய்வுக் கூட்டம் பட்டகப்பட்டியில் புதன்கிழமை நடைபெற்றது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரிவிக்கப்பட்டிருந்த தகவல் அடிப்படையில் நல்லம்பள்ளி ஒன்றியம், பாகலஹள்ளி ஊராட்சியில் சிப்காட் அமைப்பதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் 1,138 ஏக்கர் நிலம் கையப்படுத்தப்படுத்தும் நடவடிக்கையை திரும்ப பெற வேண்டும்.

இப் பகுதியில் கையகப்படுத்தப்படவுள்ள நிலங்களில் 90 சதவிகிதம் பாசன வசதி பெறுபவை. இதனால் இப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இத் திட்டத்தை மாவட்ட நிர்வாகம் கைவிடவில்லையென்றால் இப்பகுதியை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் தங்களின் கால்நடைகளுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தண்டுகாரம்பட்டியை சேர்ந்த விவசாயி ஆர். மணிவேலன் தலைமை தாங்கினார். விவசாயிகள் சிவகுமார், மாதவராஜ், சக்திவேல் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

**கொய்யாவை பாதுகாக்கும் முறைகள்**

First Published : 13 May 2010 12:41:56 AM IST

புதுச்சேரி, மே 12: கோடை காலத்தில் அதிக விளைச்சல் பெறும் கொய்யாப் பயிர்களில் பல்வேறு பூச்சித் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தி பாதுகாக்கும் முறைகளை விவசாயிகள் அறிந்து கொள்வது அவசியமாகும்.

கொய்யாப் பயிரைப் பாதுகாக்கும் முறை குறித்து புதுச்சேரி பெருந்தலைவர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என். விஜயகுமார் கூறியது:

கொய்யாவில் லக்னோ 49, ரவுண்டு உள்ளிட்ட சுமார் 10 ரகங்கள் இருக்கின்றன. வெள்ளை ஈ, மாவுப் பூச்சிகள் ஆகியவை கொய்யாவை அதிகம் தாக்குகின்றன. இப்போது தட்பவெப்ப நிலை மாறுதலாகி உஷ்ணம் அதிகரித்துள்ளதால் இப் பூச்சிகளின் இனப்பெருக்கம் அதிகமாக இருக்கிறது.

காற்றின் மூலமும், நீரின் மூலமும் இது பரவுகிறது. வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த மஞ்சள் வண்ண ஒட்டுப் பொறி கட்ட வேண்டும். அதாவது 1 அடி நீளம், 1 அடி அகலம் கொண்ட தகரத்தில் மஞ்சள் வண்ணம் தடவி, அதன் மீது வெள்ளை கிரீஸ் தடவி ஒரு கம்பியின் மூலம் ஒவ்வொரு தகரத்தையும் கொய்யா மரத்தில் தொங்க விட வேண்டும். ஒரு ஏக்கருக்கு இது போன்று 40 தகரங்கள் தொங்க விட வேண்டும். இப்படி செய்தால் மஞ்சள் வண்ணத்தால் கவரப்பட்டு வெள்ளை ஈ தகரத்தில் உள்ள கிரீஸில் ஒட்டிக் கொள்ளும். இதனால் கொய்யாவைப் பாதுகாக்க முடியம்.

மாவுப் பூச்சியும், அதன் குஞ்சுகளும் ஓர் அடைபோல கொய்யா காயிலும், பழத்திலும் வந்து ஒட்டிக் கொள்ளும். அப்படி ஒட்டிக் கொண்டு சாறை உறிவதால் அந்தக் கொய்யாப் பழம் நிறம் மாறுகிறது. அதுமட்டுமின்றி கொய்யாப் பழத்தில் திட்டுத் திட்டாக புள்ளி ஏற்படுகிறது.

ஆஸ்திரேலியா வண்டு: இதைக் கட்டுப்படுத்த ரசாயன பூச்சிக் கொல்லிகள் தெளிக்கக் கூடாது. உயிரியில் முறையில் கட்டுப்படுத்த ஒரு மரத்துக்கு 10 ஆஸ்திரேலியா பொறி வண்டுகள் (நன்மை தரும் வண்டு) மரத்தில் விடுவதால் இந்த வண்டுகள் அந்த மாவுப் பூச்சியைச் சாப்பிட்டு சுத்தம் செய்யும்.

இதனால் கொய்யாப் பழம் மாவுப் பூச்சியின் தாக்குதலில் இருந்து தப்பிக்கும். இந்தப் பொறி வண்டை ஆஸ்திரேலியாவில் முதன் முதலாக கண்டுபிடித்தனர். இதற்கு அறிவியல் பெயர் கிரிப்போலீமஸ் மான்த்ரோசோரி. ஒரு வண்டின் விலை 10 பைசா.

ஒரு மரத்துக்கு 10 வண்டு என்று கணக்கிட்டால் ரூ.1 ஆகிறது. இது சுற்றுச்சூழலைப் பாதிக்காத தடுப்பு முறை. இந்த வண்டு மாவுப் பூச்சியைதான் விரும்பி உண்ணும். கேட்பவர்களுக்கு புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் இந்த வண்டைத் தயாரித்துக் கொடுக்கும்.

மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்த 25 மில்லி வேப்ப எண்ணெய்யை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து அந்த மாவுப் பூச்சி மீது தெளிக்கும்போது கசப்புத் தன்மை காரணமாக அந்த மாவுப் பூச்சிகள் இறக்க நேரிடும்.

மீன் எண்ணெயை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து மாவுப் பூச்சியின் மீது தெளிக்கலாம். இதனால் கொய்யாக் காய் தப்பிக்கும். கொய்யா மரத்தின் இலைகளில் துருநோய் என்ற பாதிப்பு வரும். இதனால் பச்சையாக இருக்கும் இலை சிவப்பு நிறமாக மாறும்.

இதைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகம் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் கலந்து இலை மீது அதிகாலையில் தெளிக்க வேண்டும். வீட்டில் வளர்க்கும்போது குறைந்தது 2 கொய்யா மரங்கள் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் மகரந்தச் சேர்க்கை உண்டாகி விளைச்சல் அதிகம் கிடைக்கும். கட்டடத்தைப் பாதிக்காத வகையில் ஓரளவுக்குத் தள்ளி நடவேண்டும். வீட்டில் வைக்கும் கொய்யா மரத்துக்கு வேப்பம் புண்ணாக்கு வைத்து விளைச்சலை அதிகரிக்கலாம்.

ஒரு கிலோ வேப்பம் புண்ணாக்கினை 10 லிட்டர் தண்ணீரில் மண்சட்டியில் ஓர் இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் ஒரு மெல்லிய துணியில் வடிகட்ட வேண்டும். அப்படி செய்யும்போது கீழே தண்ணீர் வந்துவிடும். மேலே திப்பி நின்று விடும்.

மேலே உள்ள திப்பியை கொய்யா வேரில் வைத்து தண்ணீர் பாய்ச்சினால் மகசூல் கூடும். வடிந்த தண்ணீரை தெளிப்பான் மூலம் தெளிக்கலாம். இது பூச்சி நோயைக் கட்டுப்படுத்தும்.

இது ஒரு சிறிய தொழில்நுட்பம். இவ்வாறு பூச்சிகளின் தாக்குதலில் இருந்து கொய்யா மரங்களை பாதுகாத்து விளைச்சலை அதிகரிக்க முடியும் என்றார் விஜயகுமார்.

**தென்னை வணிக வளாக கட்டுமானப் பணி ஆய்வு**

First Published : 13 May 2010 12:26:58 AM IST

பட்டுக்கோட்டை, மே 12: தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அருகே பொன்னவராயன்கோட்டை உக்கடை கிராமத்தில் ரூ. 4 கோடியில் நடைபெற்று வரும்

தென்னை வணிக வளாக கட்டுமானப் பணிகளை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம் புதன்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளில் அதிகளவு தென்னை உற்பத்தி உள்ளதால், விவசாயிகளின் கொப்பரை கொள்முதல் மற்றும் பதப்படுத்தும் பணிகளை எளிதாக மேற்கொள்ள வேளாண்மை விற்பனைக் குழு மூலம் மத்திய, மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீட்டில் 20 ஏக்கர் பரப்பில் தென்னை வணிக வளாகம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வளாகத்தில் கொப்பரை உற்பத்திக்காக 10 உலர் களம் அமைக்கப்படுகிறது. இது தவிர, 5 நவீனக் கிடங்குகள், 10 கடைகள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

வளாகத்தில் சாலை மற்றும் அடிப்படை வசதிகள் விரைவில் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்றார் ஆட்சியர்.

ஆய்வின்போது மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுச் செயலர் மனோகரன், உதவிப் பொறியாளர் துரைராஜ், விவசாயி வா. வீரசேனன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

அடுத்து, பட்டுக்கோட்டையில் ரூ. 1.90 கோடியில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டுமானப் பணிகளையும் மாவட்ட ஆட்சியர் சண்முகம் ஆய்வு செய்தார்.

பின்னர் அலுவலர்களிடம் பேசிய ஆட்சியர், பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் கலைஞர் வீட்டு வசதி திட்டத்தில் குடிசைகள் கணக்கெடுப்புப் பணியை குறிப்பிட்ட நாள்களுக்குள் முடித்து, கணினியில் பதிவு செய்ய வேண்டும் என்றார்.

இந்த ஒன்றியத்திலுள்ள 42 ஊராட்சிகளில் 26-ல் மட்டுமே கணக்கெடுப்புப் பணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. 13,238 குடிசைகளில் 11,465 மட்டுமே இதுவரை கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அனைத்து குடிசைகளையும் விடுபடாமல் கணக்கெடுக்கவும், உடனுக்குடன் மேலாய்வு செய்யவும் ஒன்றிய ஆணையர்கள் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட 173 பணிகளில் 142 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய நிலுவைப் பணிகளையும் விரைவில் முடிக்க வேண்டும் என்றார் ஆட்சியர்.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சசிகலா, ஆர். சௌந்தரராஜன், உதவிக் கோட்டப் பொறியாளர் பேபி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூ.170 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு**

First Published : 13 May 2010 12:28:00 AM IST

ஈரோடு, மே 12: ஈரோடு மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூ.170 கோடி பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ப.லோகநா தன் தெரிவித்தார்.

கொடுமுடி அருகே ஊஞ்சலூர் கொளத்துப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில், கூட்டுறவு உறுப்பினர்களுக்கான கல்வித்திட்ட முகாம் அண்மையில் நடைபெற்றது. உறுப்பினர்களுக்கு கடனுதவிகளை வழங்கி, தனி அலுவலர் ப.லோகநாதன் பேசியது:

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள 225 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம், 2010-11-ல் விவசாயிகளுக்கு ரூ.170 கோடி பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ.125 கோடி பயிர்க்கடன் வழங்கத் திட்டமிட்டதில், இலக்கை மிஞ்சி ரூ.149.20 கோடி, 38 ஆயிரத்து 380 விவ சாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இதில், நகையீட்டின்பேரில் பயிர்க்கடனாக 12 ஆயிரத்து 15 விவசாயிகளுக்கு ரூ.60.18 கோடி வழங்கப்பட்டது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க்கடன்களுக்கு 7 சத வீத வட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இப்பயிர்க்கடனை உரிய தவணைத் தேதிக்கு முன்பு அல்லது தவணைத் தேதியில் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி இல்லை என அரசு அறிவித்துள்ளது.

அந்த 7 சதவீத வட்டித் தொகையை கூட்டுறவு சங்கங்களுக்கு அரசே வழங்கிவிடும் என்றார்.

மத்திய கூட்டுறவு வங்கிப் பொதுமேலாளர் என்.இளங்கோ பேசுகையில், சந்தையில் விவசாய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்காதபோது, அந்த விளை பொருள்களை அடகுவைத்து சரக்கீட்டுக் கடன் பெறலாம். கடந்த ஆண்டு ரூ.26.57 கோடி சரக்கீட்டுக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் தூர.ரா.சோமகாந்தன், பிரசார அலுவலர் செ.ஆனந்த்ராஜ், சங்கச் செயலர் எஸ்.குணசேகரன், முதுநிலை எழுத்தர் வி.சி.சக்திவேல் முருகையன் பேசினர். அகர்வால் கண் மருத்துவக்குழுவினரால் 55 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு, ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**பவானிசாகர் நீர்மட்டம்**

First Published : 13 May 2010 12:28:23 AM IST

ஈரோடு, மே 12: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 68.12 அடியாக இருந்தது.
அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 447 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆற்றில் விநாடிக்கு 700 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

**மாம்பழ பூச்சிகளைக் கட்டுப்படுத்த செயல் விளக்கம்**

First Published : 13 May 2010 05:21:48 AM IST

கிருஷ்ணகிரி, மே 12: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் மாம்பழ பூச்சிகளைக் கட்டுப்படுத்த இலவச செயல் விளக்கம் நடத்தப்படும்.
இதற்காக ரூ.1 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட வருவாய் அலுவலர் பெ.பிரபாகர் கூறினார்.
டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம், தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையின் சார்பில் ஆத்மா திட்டம் ஆகியன இணைந்து மாம்பழ பூச்சி அழிக்கும் செயல் விளக்கத் துவக்க விழா மூங்கில்புதூர் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
இந்நிகழ்ச்சியை மாவட்ட வருவாய் அலுவலர் பெ.பிரபாகர் தொடங்கிவைத்துப் பேசியது:
தத்துப்பூச்சி, பழ ஈ, மாவுப் பூச்சி, தண்டு துளைப்பான் பூச்சிகளால் மா பாதிக்கப்பட்டாலும், பழ ஈ முதிர் தருவாயில் உள்ள காய்களைத் தாக்கி ஊற்பத்தியை 30 சதவீதம் குறைத்து இழப்பை ஏற்படுத்தும்.
பழ ஈ பூச்சியின் தாக்குதல் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் அதிகமாகக் காணப்படும். பழ ஈ பூச்சியைக் கட்டுப்படுத்துவது குறித்து இலவச செயல்விளக்கம் அளிக்க ரூ.1 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 6 இனக்கவர்ச்சி பொறி வைக்கப்பட்டு, மா பழ ஈ பூச்சி அழிக்கப்படுகிறது. அனைத்து வட்டாரங்களிலும் இந்த செயல்விளக்கம் செய்துக் காட்டப்படும் என்றார். டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தர்ராஜ், வேளாண்மை இணை இயக்குநர் கே.ராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**விதை உற்பத்தியாளர் சங்கம் தாராபுரத்தில் ஆலோசனை**

First Published : 13 May 2010 04:35:33 AM IST

தாராபுரம், மே 12: திருப்பூர் மாவட்ட விதை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தாராபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சங்கத் தலைவர் பி.நடராஜன் தலைமை வகித்தார். கெப்ரவத் தலைவர் பி.மகுடபதி, மாநிலச் செயலர் பி.காளிதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து செயலர் எஸ்.பாலகிருஷ்ணன் பேசினார். தாரா புரம் வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தை, மண்டல வட்டாரப் போக்குவரத்து அலுவலமாகத் தரம் உயர்த்தியதற்கு தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. விதை விநியோகத்தில், விவசாயிகளுக்கு விற்பனை மானி யம் வழங்கி வரும் தமிழக வேளாண் துறைக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தாராபுரம் வட்டாரத்தில் ஓராண்டுக்கு சுமார் 20 ஆயிரம் மெட்ரிக் டன் சான்று விதை உற்பத்தி செய்யப்பட்டு, விவ சாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.
எனவே விதைச்சான்று பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்தும் வகையில், கூடுதலாக விதைச்சான்று அலுவலர் பணி யிடங்களை உருவாக்க வேண்டும் என்று கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மழைக் காப்பீடு திட்டம்: விவசாயிகள் புகார்**

First Published : 13 May 2010 12:00:00 AM IST

கடலூர், மே 12: மத்திய அரசின் பயிர் காப்பீடு திட்டமான வர்ஷ பீமா மழைக் காப்பீடு திட்டத்தில் குறைபாடுகள் இருப்பதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

÷இதுகுறித்து அனைத்து விவசாயிகள் சங்கக் கூட்டமைப்பின் கடலூர் மாவட்ட அமைப்புச் செயலாளர் பி.ரவீந்திரன் புதன்கிழமை கூறியது:

÷மழை அளவைக் கணக்கிட்டு, பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் திட்டம் மத்திய அரசால் 2009-ல் அறிமுகம் செய்யப்பட்டது. தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் இத்திட்டத்தை நிறைவேற்றுகிறது.

÷2009-ல் இத்திட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் 10 ஒன்றியங்களைச் சேர்ந்த 436 விவசாயிகள் மட்டுமே காப்பீடு திட்டத்தில் சேர்ந்தனர். ஏக்கருக்கு ரூ.430 பணம் செலுத்தினர். ஆனால் நல்லூர் ஒன்றியத்தைத் தவிர ஏனைய ஒன்றியங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருக்கும் இழப்பீடு தொகை மிகவும் குறைவு.

÷கம்மாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு இழப்பீடு ரூ.211 வழங்கப்பட்டு இருக்கிறது. தாலுகா வாரியாக நிறுவப்பட்டு உள்ள மழை அளவுக் கருவிகளில் பதிவான, மழையின் அடிப்படையில் இந்த இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. பரங்கிப்பேட்டையில் மழை அளவுக் கருவி நிறுவப்படவில்லை. அதற்காக கீரப்பாளையத்தில் பதிவான மழை அளவைக் கணக்கில் எடுத்துள்ளனர். கம்மாபுரத்தில் மழை அளவுக் கருவி இல்லை, விருத்தாசலம் மழை அளவுக் கருவியில் பதிவான மழையைக் கணக்கிட்டு
இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இது சரியல்ல.

÷இதனால் சரியான மழை அளவு கணக்கிடப்படவில்லை. எனவே அனைத்து தாலுகாக்களிலும் மழை அளவுக் கருவிகளைப் பொருத்த வேண்டும்.

÷மேலும் விவசாயிகளே பிரீமியத் தொகை முழுவதையும் செலுத்த வேண்டியது உள்ளது. வேளாண் காப்பீடு திட்டத்தில் உள்ளது போல், பிரீமியத் தொகையில் 50 சதம், மாநில அரசு மானியமாக வழங்க வேண்டும். மேலும் பிரீமியத் தொகையை அனைத்து வங்கிகளும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் இருந்து பிடித்தம் செய்து அனுப்ப வேண்டும். விவசாயிகள் வரைவோலை எடுத்து அனுப்பும் முறையில் சிரமம் உள்ளது. மேலும் இத்திட்டம் பல விவசாயிகளுக்குத் தெரியவில்லை. எனவே திட்டம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார் ரவீந்திரன்.

**எள்ளை விற்க விவசாயிகளுக்கு யோசனை**

First Published : 13 May 2010 12:35:27 AM IST

கரூர், மே 12: எள்ளை தற்போது விற்று லாபம் பெறலாமென விவசாயிகளுக்கு வேளாண் ஆய்வு மைய இயக்குநர் யோசனை தெரிவித்துள்ளார்.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மைய இயக்குநர் அஜ்ஜன் வெளியிட்ட அறிக்கை:

இந்தியாவில் உற்பத்தியாகும் எள் சீனா, ஹாலந்து, அமெரிக்கா, ஜெர்மனி, துருக்கி, நெதர்லாந்து, ஹாங்காங், இஸ்ரேல், ஐக்கிய அரேபிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இந்தியாவில் ராஜஸ்தான், குஜராத், மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் மொத்த எள் உற்பத்தி பரப்பில் 72 சதத்தையும், மொத்த உற்பத்தியில் 53 சதத்தையும் பெற்றுள்ளன.

2008-09 ஆம் ஆண்டில் 5.8 லட்சம் டன்னாக இருந்த எள் உற்பத்தி, நடப்பு 2009-10 ஆம் ஆண்டில் 7.6 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முக்கியக் காரணம், சர்வதேச சந்தையில் எள்ளுக்கான தேவை அதிகரித்ததேயாகும்.

தமிழகத்தில் எள் சுமார் 0.65 லட்சம் ஹெக்டரில் பயிரிடப்படுகிறது. எள் பயிரிடும் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் உள்நாடு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் சிவகிரி சந்தையில் 15 ஆண்டு சந்தைத் தகவல்களை
ஆராய்ந்தது.

இதில், நல்லெண்ணைய்க்கான சீரான தேவை, மற்ற மாநிலங்களில் உள்ள எள் பயிர்களின் நிலை, அவற்றின் மூலம் பெறப்படும் தொடர் வரத்து ஆகியவை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில், உணவு எண்ணெய் ஏற்றுமதிக்கு செப்டம்பர் 2010 வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத் தடையால் எள் விலை மிகச் சிறிய அளவில் பாதிக்கப்படும். எனினும், சிவப்பு எள்ளின் விலை தமிழகத்தில் ரூ. 41 முதல் 43 வரை கிலோவுக்கு வழங்கப்படலாம். செப். அக்டோபர் மாதங்களில் விலையேற வாய்ப்புள்ளது.

எனினும், எள் சேமிப்பை முறைப்படி செய்யாவிடில் எள்ளின் தரம் குறைந்து விடும். எடையும் குறைந்து, குறைந்த அளவிலான வருவாயே ஈட்ட முடியும்.

எனவே, விவசாயிகள் தங்களிடமுள்ள எள்ளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் எவ்வித பிடித்தமும் இன்றி தற்போது விற்றுப் பயனடையலாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார் அவர்.

**தமிழக விவசாயிகள் சங்கச் செயற்குழுக் கூட்டம்**

First Published : 13 May 2010 12:30:47 AM IST

பெரம்பலூர், மே 12: பெரம்பலூர், அரியலூர், திருச்சி மாவட்ட தமிழக விவசாயிகள் சங்கச் செயற்குழுக் கூட்டம் பெரம்பலூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம் தலைமை வகித்தார். திருச்சி மாவட்டத் தலைவர் ஆர். ரங்கநாதன், மாவட்டச் செயலர் என். கணேசன், பெரம்பலூர் மாவட்டத் தலைவர் பி. மாணிக்கம், இளைஞரணிச் செயலர் வி. நீலகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் பருவ மழை பொய்த்ததால், சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இந்த மூன்று மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, கூட்டுறவு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள கடன்கள் அனைத்தையும் மத்திய, மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும்.

60 வயதுக்கு மேல் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கட்டுப்படியான விலை கிடைக்காததால், பாகுபாடு இல்லாமல், நிபந்தனையின்றி ஓய்வூதியம் அளிக்க வேண்டும்.

வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகளிடமிருந்து, விலை குறைத்து கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்படாமலிருக்க சாகுபடி செலவைக் கணக்கிட்டு, குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ.15 விலை நிர்ணயம் செய்து, ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும்.

சிறு கனிம சட்டம் 1959 ஆம் ஆண்டின் படி ஏரி, ஓடையில் விவசாய உபயோகத்துக்கும், சொந்த பயன்பாட்டுக்கும் வண்டல் மண்ணை அனுமதி மற்றும் கட்டணம் இல்லாமல் எடுத்துச் செல்ல உத்தரவிடப்பட்டது. இதன்படி, வண்டல் மண் எடுத்துச் செல்வதை தடை செய்யக் கூடாது.


மேலும், மண் அள்ள ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், இயந்திரம் மூலம் மண் அள்ள தமிழக அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் அரியலூர் மாவட்ட இளைஞரணிச் செயலர் வி. விஸ்வநாதன், வட்டார பொறுப்பாளர்கள் எம்.எஸ். ராஜேந்திரன், பி. விவேகானந்தன், ஏ. மணி, கே. துரைராஜ், ஆர். அருணாசலம், கே. ஞானசேகரன், என்.பிச்சைபிள்ளை, எஸ்.கே. செல்லக்கருப்பு, வி. வினோபா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**எருமை விலை ரூ. 5 லட்சத்து 72 ஆயிரம்**

மே 12,2010,23:53 IST



ஆலமூரு(ஆந்திரா) :கறவை மாடுகளில் அதிக பால் தரும் போட்டியில், முதல் பரிசு பெற்ற எருமை, ஐந்து லட்சத்து 72 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது.அரியானா மாநிலம் பரீதாபாத் அருகே, நீம்கா கிராமத்தில் விவசாயி ஒருவர் வைத்திருந்த எருமை மாடு ஒன்று, தினமும், 31 முதல் 32 லிட்டர் பால் தருவதாக செய்தி பரவியது.இதையடுத்து, ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டம் ஆலமூருவை சேர்ந்த விவசாயி கோரா வீரபத்திரராவ், அரியானா சென்று எருமையின் உரிமையாளர் தர்மாபாயை சந்தித்து, எருமையை விலைக்கு வாங்க விரும்புவதாக கூறினார்.

**அவரிடம் தர்மாபாய் கூறுகையில்**, 'அந்த எருமையை வளர்ப்பதற்காக, அரியானா அரசு, ஊக்கத்தொகையாக ஒரு லட்சம் ரூபாய் பரிசு வழங்கி என்னை கவுரவித்தது. எங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்கப்பட்டது. இந்த எருமையின் படம், இன்டர்நெட் மற்றும் உள்ளூர் பத்திரிகைகளில் செய்தியாக வெளியானது' என்றார். இந்த எருமை மீது ஆர்வம் கொண்ட ஆந்திர விவசாயி, வீரபத்திரராவ் ஐந்து லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் கொடுத்து, எருமையை விலைக்கு வாங்கினார். இதை ஆந்திராவுக்கு ஏற்றிவர லாரி வாடகையாக 22 ஆயிரம் ரூபாய் செலவு செய்தார்.தற்போது ஏழு மாத சினையாகி உள்ள எருமை, இப்போதும், தினமும் 15 லிட்டர் பால் தருவதாகவும் அவர் கூறினார்.

**ஆடு வளர்ப்போருக்கு நலவாரியம்: அரசு உத்தரவு**

பேரூர் : ஆடுவளர்ப்போர் பயன்பெறும் வகையில், ஆடுவளர்ப்போர் நலவாரியம் மற்றும் குழுவினை அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சியில் ஆடுவளர்ப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆடுவளர்க்க கிராம மக்கள், கிராம மகளிர் பயன்பெறும் வகையில், தனியாக ஆடு வளர்ப்போர் நலவாரியம் ஒன்றை அமைத்து பல்வேறு உதவிகளை வழங்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான அறிவிப்பை, 2009-10ம் ஆண்டுக்கான கால்நடை பராமரிப்புத்துறையின் மானியக்கோரிக்கை குறித்த விவாதத்தின்போது, ஊரகதொழில் மற் றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் பழனிசாமி அறிவித்தார். இதையடுத்து, ஆடு வளர்ப்போர் நலவாரியத்துக்கான நிர்வாகிகள் பட்டியலை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இதில், ஆடுவளர்ப்போர் நலவாரிய தலைவராக ஊரக தொழில் மற்றும் கால்நடைபராமரிப்புத்துறை அமைச்சர் பழனிசாமி, துணைதலைவராக கம்பம் எம்.எல்.ஏ., ராமகிருஷ்ணன், உறுப்பினர்களாக, குரும்பா மக்கள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கிருஷ்ணசாமி, திருவாடணை தொகுதி எம்.எல்.ஏ., ராமசாமி, ஓமலூர் எம்.எல்.ஏ., தமிழரசு, கொல்லிடம் எம்.எல்.ஏ., ரவிக்குமார் உள்பட 18 பேர் கொண்ட குழுவினர் அறிவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 'ஆடுவளர்ப்போர் நலவாரியம்' சட்டமுறை சாராத வாரியமாகவும், ஆடுவளர்ப்போரின் நிதிப்பங்கேற்புடனும் அரசின் மானிய உதவியோடும் நலத்0திட்ட உதவிகள் வழங்கும் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தும்.

**விளை நிலங்களை மனைகளாக மாற்றுவது அதிகரிப்பு! : விவசாயம் கேள்விக்குறியாகும் அபாயம்**

சிறுபாக்கம் : தேசிய நெடுஞ்சாலையோரங்களில் உள்ள நிலங்கள் மனைகளாக மாற்றப்பட்டு வருவதால் விவசாயம் கேள்விக்குறியாகியுள்ளது.

கடலூர் மாவட்டத்தின் கடைகோடி பகுதியான வேப்பூர், சிறுபாக்கம் பகுதிகளில் மானாவாரி நிலங்கள் அதிக அளவில் உள்ளன. இதில் மல்லி, பருத்தி, மக்காச்சோளம், மணிலா, வரகு உள்ளிட்ட பயிர்கள் விளைவித்து வந்தனர். கடந்த ஐந்து ஆண்டுகளாக பருவம் தவறிய மழை, பணியாளர்கள் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பயிர் செய்வதில் ஆர்வமின்றி இருந்தனர். பல தடைகளை மீறி பயிரிட்ட விவசாயிகளும் இயற்கை சீற்றம் காரணமாக போதிய விளைச்சல் இன்றி நஷ்டமடைந்தனர்.

இதனால் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் நிலங்களை வந்த விலைக்கு விற்று விட்டு வேறு தொழிலுக்கு மாறினர். பலர் குடும்பத்தை கிராமத்தில் விட்டுவிட்டு வேலை தேடி வெளி மாநிலம் மற்றும் வெளி நாடுகளுக்கு சென்றுள்ளனர். இந்நிலையில் வேப்பூர் வழியாக செல்லும் திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலையாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து தேசிய நெடுஞ் சாலையை ஒட்டியுள்ள வேப்பூர் பகுதியில் கல்வி நிறுவனங்கள் துவங்கப்பட்டன. தொடர்ந்து இப்பகுதியில் நிலங்கள் விலை குறைவாக கிடைப்பதால் பெரும் தொழிலதிபர்கள் தங்களின் எதிர்கால தேவைக்காக விளை நிலைங்களை வாங்கினர்.

இதனை அறிந்த கோவை, ஈரோடு, சேலம், புதுச்சேரி, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் முதலாளிகள் இப்பகுதியில் முகாமிட்டு வேப்பூர், ஐவதுகுடி, கண்டப்பங்குறிச்சி, பெரியநெசலூர், நாரையூர், ராமநத்தம், வெங்கனூர், கழுதூர், ஆவட்டி கூட்டுரோடு, மங்களூர், விருத்தாசலம் - சேலம் நெடுஞ்சாலையில் விளம்பாவூர், அடரி, சிறுபாக்கம் பகுதிகளில் சாலையோரம் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விளை நிலங்களை விலைக்கு வாங்கி மனைகளாக பிரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

---

இதற்கு முன் ஒரு ஏக்கர் 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை விலை போனது தற்போது தேசிய நெடுஞ்சாலையோரம் உள்ள நிலங்களுக்கு 3 முதல் 10 லட்சம் ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கி பிளாட் போட்டுள்ளனர். அனைத்து வசதிகளும் உள்ளதாக தெரிவித்தும், அபிரிமிதமான பரிசுகளை அறிவித்தும் வியாபாரம் செய்கின்றனர். மானாவாரி நிலங்களே கூடுதல் விலை போவதால், இப்பகுதியில் நீர் பாசனத்துடன் நன்கு விளைச்சல் உள்ள நிலங்களையும் ரியல் எஸ்டேட் வியாபாரிகளிடம் விற்க விவசாயிகள் முயற்சித்து வருகின்றனர்.

இதனால் ஓரிரு ஆண்டுகளில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டிய வேப்பூர், கழுதூர், ஐவதுகுடி, ராமநத்தம் பகுதிகளில் விவசாயம் என்பது கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இப்பகுதியில் பிரதான உப தொழிலாக விளங்கி வரும் கால்நடை வளர்ப்பும் பாதிக்கும் நிலை ஏற் பட்டுள்ளது. நன்கு விளைச்சல் தரக்கூடிய நிலங்களை மனைகளாக மாற்றுவதை தடுக்க மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இயற்கை வேளாண்மை விஞ்ஞானி விவசாய பயிற்சி**

நெல்லிக்குப்பம் : இயற்கை வேளாண் விஞ்ஞானி சட்டையணியா சாமியப்பன் பயிற்சி அளித்தார்.

நெல்லிக்குப்பத்தில் திருப்பூரைச் சேர்ந்த இயற்கை வேளாண்மை விஞ்ஞானி சட்டையணியா சாமியப்பன் விவசாயிகளுக்கு இயற்கை விவசாய பயிற்சி அளித்தார். பயிற்சியில் சாமியப்பன் பேசுகையில் 'திருப்பூரில் ஆடம்பர ஆடை தயாரிக்க நிலத்தடி நீரை உறிஞ்சி கழிவுநீரை நொய்யல் ஆற்றில் கலந்து நீரை பாழாக்குகின் றனர். இதை மக்களுக்கு உணர்த்தவே சட்டையணிவதை தவிர்த்தேன். வெள்ளை ஆடைகள் அணிவதால் முடிந்தவரை மண்ணை கெடுக்காமல் இருக்க முடியும்.

விவசாயத்துக்கு வெளியில் இருந்து இடுபொருட் கள் எடுத்துச் செல் வதை தவிர்க்க வேண்டும். நம் நிலத்தை சுற்றியுள்ள மரங் களின் இலைகளை மாட்டுச் சாணியோடு ஊறவைத்து பாசன நீரோடு அனுப்பலாம். மாட்டு சிறுநீர், சாணத்தை அதிகளவு பயன்படுத்த வேண்டும். நிலத்திலேயே அதிக மண் புழுக்களை வரவழைக்க முயற்சி செய்ய வேண்டும்.

மண்புழுக்களும், நுண்ணுயிர்களும் பெருகினால் நிலத்துக்கு வேறு உரங்கள் தேவையில்லை. ரசாயன உரங்களால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுகிறது. பூச்சி மருந்துகளால் மனிதனை நோய்கள் தாக்குகின்றன. மேலும், அதிக செலவால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. நம் நிலத்தில் உள்ளதை பயன்படுத்தி இயற்கையாக விவசாயம் செய்தால் மண்ணையும், சுற்றுசூழலையும் பாதுகாக்க முடியும்' என கூறினார்.

**மண் பரிசோதனை மையம் திறப்பு**

நெல்லிக்குப்பம் : நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் மண் பரிசோதனை மையம் துவங்கப்பட்டது.

நெல்லிக்குப்பம் இ.ஐ. டி., பாரி சர்க்கரை ஆலையில் மண் பரிசோதனை மையம் துவக்க விழா நடந்தது. துணைத் தலைவர் ரவீந்திரன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் முருகேசன் முன்னிலை வகித்தார். மையத்தை முருகப்ப செட்டியார் ஆராய்ச்சி நிறுவன செயற்குழு உறுப்பினர் மகத்வராஜ் திறந்து வைத்தார்.

பொது மேலாளர்கள் பொன்னய்யன், துரைசாமி, மண்ணியல் நிபுணர் புஷ்பவள்ளி, கோட்ட மேலாளர் திருஞானம், பயற்சி அலுவலர் குருசாமி, விவசாய சங்கத் தலைவர் அருணாச்சலம் உட்பட பலர் பங்கேற்ற னர். குரோ மோட்டா கிராம் முறையில் மண் பரிசோதனை எளிய வழியில் துல்லியமாக நடைபெறும். 48 மணி நேரத்துக் குள் முடிவை

பெறலாம். மண்பரிசோதனை முடிவின்படி தேவையான உரங்கள் அளிப்பதன் மூலம் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற முடியும்.

**வர்ஷா பீமா மழை காப்பீட்டுத் திட்டத்தில் 2009ம் ஆண்டு சம்பா நெல்லுக்கு இழப்பீடு**

கடலூர் : வர்ஷா பீமா மழை காப் பீட்டுத் திட்டத்தில் 2009ம் ஆண்டிற்கான சம்பா நெல் லுக்கு இழப்பீடு தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கலெக்டர் சீத்தாராமன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கடந்த 2009ம் ஆண்டு வர்ஷா, பீமா மழை காப் பீட்டுத் திட்டத்தை மத்திய அரசு நிறுவனமான தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் அமல்படுத்தியது. இத்திட்டத்தில் குறைந் தளவு மழை, கூடுதல் மழை, தொடர் வறண்ட தினங்களைக் கொண்டு இழப்பீடு விகிதம் கணக்கிடப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் 2009ம் ஆண்டு ஆகஸ்ட் 15 முதல் டிசம்பர் 31 வரை குறைந்தளவு மழை, செப்டம்பர் 15 முதல் நவம் பர் 15 வரை தொடர் வறண்ட நாட்கள், செப் டம்பர் 15 முதல் ஜனவரி 31 வரை கூடுதல் மழை அளவை கண்காணித்து மழை மானியின் மழை புள்ளி விவரங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு வட்டாரத்திற்கும் நஷ்டஈடு கணக்கிடப்பட்டுள்ளது.

அதன்படி கீரப்பாளையம் வட்டாரத்திற்கு ஏக்கருக்கு 606 ரூபாயும், பரங்கிப்பேட்டைக்கு 563, நல்லூருக்கு 1,593, மங்களூருக்கு 493, குறிஞ்சிப்பாடிக்கு 563, மேல் புவனகிரிக்கு 606, குமராட்சிக்கு 623, காட்டுமன்னார்கோவிலுக்கு 367, கம்மாபுரம் வட்டாரத்திற்கு 211 ரூபாய் இழப்பீடாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் தகுதியுடைய அனைத்து விவசாயிளுக்கும் காப்பீடு நிறுவனம் மூலம் இழப் பீடு தொகை வரைவோலையாக வழங்கப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மரவள்ளியில் மஞ்சள் காரை நோய்: அதிகாரிகள் ஆய்வு**

சிறுபாக்கம் : வேப்பூர் பகுதியில் மரவள்ளியில் மஞ்சள் காரை நோய் தாக்குதல் ஏற்பட்டதையடுத்து அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

வேப்பூர், சிறுபாக்கம் பகுதிகளில் குங்கும ரோஸ், பர்மா, வெள்ளை ரோஸ் ஆகிய மரவள்ளிகளை விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். கடந்த சில நாட்களாக இப்பயிர்களை மஞ்சள் காரை நோய் தாக்கியதால் செடிகள் காய்ந்தது. இதுகுறித்து தினமலரில் படத்துடன் செய்தி வெளியானது.

இதனைத் தொடர்ந்து கடலூர் தோட்டகலை துணை இயக்குனர் முகமது யாகியா தலைமையில் விருத்தாசலம் அறிவியல் நிலைய தலைவர் சுப்பிரமணியன், பேராசிரியர் இந்திராகாந்தி, வீரமணி ஆகியோர் மங்களூர், நல்லூர் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

வேப்பூர், காட்டுமயிலூர், மாங் குளம், அடரி உள்ளிட்ட பகுதிகளில் 300 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த மரவள்ளி பயிர்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆய்வில் மரவள்ளி பயிரிடப்பட்டிருந்த நிலங்களில் உள்ள மண்ணில் இரும்பு சல்பேட் (அன்னபேரி உப்பு) தாது சத்து குறைபாட்டினால் மஞ்சள் காரை நோய் தாக்கியுள்ளது தெரியவந்தது.

இதனையடுத்து விவசாயிகளிடம் 'நோய் தாக்கிய வயல்களில் ஒரு லிட்டர் தண்ணீரில் இரும்பு சல்பேட் (அன்னபேரி உப்பு) 10 கிராம், துத்தநாக சல்பேட் 5 கிராம் மற்றும் யூரியா 10 கிராம் என்ற விகிதத்தில் ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர்

கரைசல் செய்து கை தெளிப்பான் மூலம் ஒரு வார இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும். அல்லது இரும்பு சல்பேட் 5 கிலோவை 20 கிலோ மணலுடன் கலந்து மரவள்ளி செடிகளுக்கு அடியில் இடைவெளி விட்டு வைத்து நீர்பாய்ச்சி நோயை கட்டுப்படுத்தலாம் எனவும் அறிவுறுத்தினர். ஆய்வின்போது தோட்டகலை உதவி இயக்குனர்கள் அமிர்தலிங்கம், ரமணன், முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

**விவசாயிகள் சங்கம் கண்டன பொதுக்கூட்டம்**

பண்ருட்டி : பண்ருட்டி அடுத்த எனதிரிமங்கலத்தில் விவசாயிகள் சங்கம் சார்பில் கண்டன பொதுக் கூட்டம் நடந்தது.

அண்ணாகிராமம் ஒன் றியம் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் சிறு, குறு விவசாயிகளுக்கு வங்கி சட்ட திட்டத்தை திருத்தம் செய்து கடன் வழங்க கோருவது உள் ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி எனதிரிமங்கலம் வி.ஏ.ஒ., அலுவலகம் முன் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு, ஒன்றிய தலைவர் தட்சணாமூர்த்தி தலைமை தாங்கினார். குப்புசாமி, ஏழுமலை, ரமேஷ், லோகநாதன் முன் னிலை வகித்தனர். விவசாய சங்க மாவட்ட தலைவர் நாராயணன், செயலா ளர் ரவிச்சந்திரன், மாநில துணை செயலாளர் எழுமலை, லோகநாதன், ஆறுமுகம் பங்கேற்றனர்.

**'கார்பைடு' அபாயம்! ரசாயனத்தில் பழுக்கும் மாம்பழம் கரூர் நகராட்சி நிர்வாகம் மெத்தனம்**

கரூர்: கரூரை அச்சுறுத்தும் ரசாயன முறையில் பழுக்கவைக்கப்படும் மாம்பழம் மீதான நடவடிக்கை எடுப்பதில் கரூர் நகராட்சி நிர்வாகம், மாவட்ட சுகாதாரத்துறை மெத்தனமாக உள்ளது. கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை அரசு தரப்பில் நடத்தப்படும் எந்த சோதனையும் பெயரளவில்சில மணி நேரம் நடத்தி பதிவு மட்டும் செய்யப்படுவது வழக்கமாக உள்ளது. காலாவதியான மருந்து குறித்து மாநிலம் முழுவதும் நடவடிக்கை துவங்கி ஒரு வாரம் கழித்து டவுன் டி.எஸ்.பி., ஞானசிவக்குமார் தலைமையில் அலுவலர்கள் சில கடைகளில் மட்டும் சோதனை நடத்தினர். அப்போதும் மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆய்வாளர் எவரும் திருச்சியில் இருந்து ஆய்வுக்கு கரூர் வரவில்லை.

அடுத்த கட்டமாக காலாவதியான உணவு பண்டம் மற்றும் மளிகை குறித்து ஆய்வு தற்போது மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் தொடர்ந்து நடக்கிறது. கடந்த ஏழாம் தேதி, கரூர் பஸ் ஸ்டாண்ட் பகுதியில் உள்ள சில கடைகளில் மட்டும் கலெக்டர் உமாமகேஸ்வரி தலைமையில் சுமார் மூன்று மணிநேரம் ஆய்வு நடந்தது. பறிமுதல் செய்யப்பட்ட உணவு பொருட்களை பஸ் ஸ்டாண்டுக்குள் லாரி ஏற்றி அழித்து தங்கள் கடமையை அலுவலர்கள் முடித்துக்கொண்டனர்.

அதே சமயம், கரூர் ஜவகர் பஜார், உழவர் சந்தை, கோவை ரோடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மொத்த வணிகர் கடைகளில் எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், எந்த மளிகை கடையிலும் அலுவலர்கள் நுழையவில்லை. ஒரே நாளில் காலையில் மூன்று மணிநேரம் கரூர் பஸ் ஸ்டாண்டிலும், மாலை மூன்று மணிநேரம் குளித்தலையிலும் ஆய்வு நடத்தி ஊடகங்களில் 'போஸ்' கொடுத்துவிட்டு 'கடமை'யை முடித்துக்கொண்டனர்.தற்போது, அடுத்த கட்டமாக மாம்பழ சீசன் துவங்கியுள்ளதால், நகரின் பெரும்பான்மை இடங்களில் மாம்பழ விற்பனை சூடுபிடிக்க துவங்கியுள்ளது. சீசன் துவங்கியதும் திருச்சி, கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மாம்பழம் பழுக்க வைக்க ரசாயனம் பயன்படுத்துவது குறித்து ஆய்வு துவங்கியதுடன், பறிமுதல் செய்து அழிக்க துவங்கியுள்ளனர். இந்த நடவடிக்கை இதுவரை கரூரில் துவங்கப்படவில்லை. கரூர் டவுன் போலீஸ் ஸ்டேஷன் அருகில், ஜவகர் பஜார் உள்ளிட்ட பகுதியில் பெரிய அளவில் மாம்பழ குடோன்கள் உள்ளன. பெரும்பான்மை குடோன்களில் கடந்த ஆண்டுகளில் 'கார்பைடு' ரசாயனம் பயன்படுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு பெயரளவில் பறிமுதலும் செய்யப்பட்டது. நடப்பாண்டு இந்த அளவு கூட நடவடிக்கை எடுப்பதில் மாவட்ட சுகாதாரத்துறை, கரூர் நகராட்சி நிர்வாகம் மெத்தனமாக உள்ளது. கரூரில் பெரியகுளம், சேலம் பகுதியில் இருந்து பெருமளவில் மாங்காய்

வரவழைக்கப்பட்டு குடோனில் குவிக்கப்படுகிறது. மாங்காய் குவியலுக்குள் 'கார்பைடு' தூள் அல்லது கல் வைப்பதன் மூலம் இரண்டு மணி நேரத்தில் காயுடைய நிறம் மாறி பழுக்க துவங்கிவிடுகிறது. ஒரு அறைக்குள் வெப்பத்தை உருவாக்க ஐந்து கிராம் 'கார்பைடு' பவுடர் மட்டுமே போதுமானது. டன் ஒன்றுக்கு ஒரு கிராம் 'கார்பைடு' வைத்தாலே மாங்காய் பழுத்துவிடுகிறது.

'கார்பைடு' மூலம் பழுக்க வைத்த மாம்பழம் உண்பதன் மூலம் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைக்கு நரம்பு, மூளை வளர்ச்சி பாதிக்கப்படும். முதல் பிரச்னையாக வயிற்றுப்போக்கு ஏற்படும். தொடர்ந்து சாப்பிட்டால் கான்சர் வரை வர வாய்ப்புள்ளது,' என்று டாக்டர்கள் எச்சரிக்கின்றனர். நகராட்சி அலுவலர்களோ, 'தங்களால் நடவடிக்கை எடுக்க முடியாத அளவில் கரூரில் அரசியல் தலையீடு உள்ளதாக' கூறுகின்றனர். 'மாவட்ட சுகாதாரத்துறை நேரடியாக ஆய்வு நடவடிக்கையில் இறங்கினால் டன் கணக்கில் ரசாயன மாம்பழம் பறிமுதல் செய்யலாம்' என்றும் கூறினர்.

சுகாதாரத்துறை துணை இயக்குனர் சதாசிவம் கூறியதாவது: கரூர் நகராட்சி பகுதியில் உள்ள குடோன்களில் 'கார்பைடு' ரசாயனம் பயன்பாடு குறித்து அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். மேலும், உணவு பொருள் முற்றும் மளிகை கடைகளிலும் ஆய்வு நடத்த வேண்டும். இதற்கு, நான் நகராட்சி நிர்வாகத்திடம் கூறுகிறேன். குறிப்பாக ஏதாவது கடை குறித்து புகார் தெரியவந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். வழக்கமான ஆய்வு பணி விரைவில் துவங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**கரூரில் நாளை வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி**

கரூர் : கரூர் பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாளை (14ம் தேதி) வெண் பன்றி வளர்ப்பு இலவச பயிற்சி நடக்கிறது.

இதுகுறித்து ஆராய்ச்சி மையத் தலைவர் செந்தில்வேல் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கரூர் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் நாளை வெண்பன்றி வளர்ப்பு இலவச பயிற்சி நடக்கிறது. பயிற்சியில் வெண்பன்றி வளர்ப்பு, கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள், அவற்றை தடுக்கும் முறைகள் விற்பனை உத்திகள், பண்ணை பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு களப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. மேலும் இப்பயிற்சியில் கலந்துகொள்வோர் காலை 9.30 மணிக்கு பயிற்சி மையத்திற்கு வர வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

**.தேங்காய்க்கு செஸ் வரி விலக்கு உற்பத்தியாளர்கள் வலியுறுத்தல்**

வேலாயுதம்பாளையம் : தமிழ்நாடு தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் நாமக்கல்லில் நடந்தது. மாநில தலைவர் அழகர்சாமி தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் ராசப்பன் முன்னிலை வகித்தார். மாநில செயலாளர் பட்டீஸ்வரன், மாநில சங்க ஆலோசகர் திருச்சி சங்கையா, பாலசுப்பிரமணியன், மதுரை ஜமால் மைதீன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் தென்னைமரம் ஏறி தேங்காய் பறிக்கும் தொழிலாளர்களுக்கு தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. கேரள அரசு மரம் ஏறுவதற்கு பயிற்சி பள்ளி அமைத்து பெண்களுக்கு கூட பயிற்சி அளிக்கிறது. அதுபோல் தமிழக அரசும் தென்னை உற்பத்தி அதிகமாக உள்ள இடங்களில் பயிற்சி மையம் அமைத்து மானிய தொகையுடன் பயிற்சி அளித்து மரம் ஏறும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும்.

தண்ணீர் உள்ள தேங்காய் பூஜைக்கும், சமையலுக்கும் பயன்படுவதால் அதற்கு விதிக்கப்படும் செஸ் வரியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும். ரூபாய் 4 கோடி நிதி ஒதுக்கீட்டில் பட்டுக்கோட்டையில் தென்னை வணிக வளாகம் அமைக்க சட்டசபையில் அறிவித்து இரண்டு வருடங்களாகியும் பணிகள் துவங்கப்படவில்லை. இப்பணியினை உடனே துவங்க வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நாமக்கல் மாவட்ட செயலாளர் ஹபிபுல்லா, மாநில இணைச்செயலாளர்கள் ஜெகநாதன், பொருளாளர் சக்திவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு மானிய விலையில் இடுபொருள் உதவி இயக்குனர் தகவல்**

க.பரமத்தி : தோட்டக்கலைப் பயிர் கள் சாகுபடிக்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து க.பரமத்தி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) மனோரஞ்சிதம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: உயர் தொழில்நுட்பம் மூலம் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி மற்றும் மகசூல் உற்பத்தியை பெருக்குவதற்கு தோட்டக்கலைதுறை மூலம் உற்பத்தியை பெருக்குதல் திட்டத்தின் கீழ் ஒரு எக்டேருக்கு ஒரு விவசாயிக்கு ரூபாய் 7 ஆயிரத்து 500 மதிப்பிலான இடு பொருட் கள் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது.

அதன்படி மஞ்சளுக்கு 19:19:19 உரங்கள், கொத்தமல்லி பயிருக்கு விதை, பயிர் பாதுகாப்பு மருந்து மற்றும் உரங்கள், மலர் பயிரில் செண்டுமல்லிக்கு (செவ் வந்தி) விதை மற்றும் உரங் கள், பழப்பயிரில் சப் போட்டாவிற்கு ஒரு எக்டேர் பரப்பிற்கு கன்றுகளும் வழங்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகி பயன் பெறலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**பட்டு உற்பத்தியை பெருக்க நடவடிக்கை நபார்டு வங்கி உதவியுடன் திட்டம் அறிமுகம்**

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பட்டுஉற்பத்தி பெருக்கும் வகையில் தமிழத்தில் முதல் முறையாக நபார்டு வங்கி மூலம் ஒருங்கிணைந்த தீவிர பட்டு வளர்ச்சி குழும மேம்பாட்டு முன்னோடி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், பேரிகை, சூளகிரி, பாகலூர் மற்றும் தேன்கனிக்கோட்டையில் 5,000 மேற்பட்ட விவசாயிகள் மல்பரி பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இங்கு, தமிழகத்தில் அதிகளவு பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் பட்டு கூடுகள், ஆந்திரா மற்றும் கர்நகாடகா மாநிலங்களில் உள்ள ரீலிங் தொழிற்சாலைகள், டுவிஸ்ட்டிங் தொழிற்சாலைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அதிகளவு பட்டு உற்பத்தி செய்தாலும், நேரடியான விற்பனை நிலையங்கள் இல்லாததால் பட்டு உற்பத்தியில் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைப்பது இல்லை. இந்நிலையில், மாவட்டத்தில் பட்டு உற்பத்தியை பெருக்கி விவசாயிகளுக்கு நியாயமான லாபம் கிடைக்கும் வகையில், பட்டு வளர்ச்சித்துறை நபார்டு வங்கி மூலம் ஒருங்கிணைந்த தீவிர பட்டு வளர்ச்சி குழும மேம்பாட்டு முன்னோடி திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. முதற்கட்டமாக மாவட்டத்தில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய சூளகிரி யூனியனில் தீவிரபட்டு வளர்ச்சி குழும மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
இதற்காக சூளகிரி அடுத்த நெரிகம், குடிசாதனப்பள்ளியில் தீவிர பட்டு வளர்ச்சி குழும திட்டத்துக்காக திட்ட அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இது குறித்து பட்டு வளர்ச்சி துறை அதிகாரிகள் கூறியதாவது:
பரிசோதனை முயற்சியாக சூளகிரி பகுதியில் முதலில் 200 ஏக்கரில் 'வி1' என்ற ரக மல்பரி செடிகள் நடவு செய்யப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் அமைத்து, புதிய தொழில்நுட்ப முறையில் 60 பட்டு வளர்ப்பு கூடங்கள் அமைக்கப்பட உள்ளன. ஏற்றுமதி ரக பட்டு கூடுகள் உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு மானிய விலையில் தரமான ிற்று குச்சிகள் வழங்கப்படுகிறது. பட்டு புழு வளர்ப்புக்கு தேவையான இழு பொருட்கள், பிளீச்சிங் பவுடர், சானிடெக், பேப்பர் ஆகியவையும் குறைந்த விலைக்கு வழங்கப்படுகிறது. உற்பத்தி செய்யும் பட்டு கூடுகளை

விவசாயிகள் தரம் சோதித்து விலை நிர்ணயம் செய்து கொள்ள வசதியாக எலக்ட்ரானிக் எடை மேடை அமைக்கப்படுகிறது. தமிழகம், கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் உள்ள முக்கிய பட்டு கூடு மார்க்கெட்டிங்களில் அன்றாட கொள்முதல் விலையை தெரிந்து, அதற்கேற்ப விலை நிர்ணயித்து விவசாயிகளும் லாபம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
விவசாயத்தில் விதை விதைத்து சாகுபடி செய்த காலம் போய் விட்டது. அது போல் பட்டு புழு வளர்ப்பிலும் முட்டையில் இருந்து புழுவை உற்பத்தி செய்த காலம் போய், இளம்புழுக்களில் இருந்து பட்டு உற்பத்தி தொழில் துவங்கும் தொழில்நுட்பம் வந்து விட்டது.

தற்போது விவசாயிகளுக்கு குறுகிய காலத்தில் அதிக லாபம் கிடைக்கிறது. ஓசூர் பகுதியில் உற்பத்தி செய்யும் பட்டு கூடுகள் கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் கூடுதல் போக்குவரத்து செலவு விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. இதை தடுக்கும் வகையில் ஓசூரில் பட்டு கூடுகளை விற்பனை செய்வதற்கு ரீலிங் (பட்டு கூடு நூல்இழைப்பு ஆலை) தொழிற்சாலையும், டுவிஸ்டிங் (பட்டு நூல் பின்னும் ஆலை) தொழிற்சாலைகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மல்பரி குச்சி நடவு, சொட்டு நீர் பாசனம் அமைத்தல், புழுவளர்ப்பு கொட்டகை அமைத்தல், வெள்ளைப்பட்டு கூடுவதற்கு வளர்ப்பதற்கு தேவையான இரு பொருட்கள், பட்டு நூல் இழை எடுத்தல் மற்றும் முறுக்கேற்றல் தொழிற்சாலைக்கு எந்திரம் வாங்குவதற்கு விவசாயிகளுக்கு மானிய உதவிகள் வழங்கப்படுகிறது. இவ்வாறு தெரிவித்தனர்.

**'மா'வில் ஈ பூச்சியை கட்டுப்படுத்த நடவடிக்கை : கி.கிரி மாவட்டத்துக்கு ரூ.1 லட்சம் நிதி ஒதுக்கீடு**

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவில் ஈ பூச்சியை கட்டுப்படுத்த இலவச செயல் விளக்கம் நடத்த, தமிழக அரசு ஒரு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது," என, டி.ஆர்.ஓ., பிரபாகர் தெரிவித்தார். கிருஷ்ணகிரி டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மையம் மற்றும் தமிழ்நாடு அரசு வேளாண் துறையின் சார்பில் ஆத்மா திட்டத்தின் கீழ் மா பழ ஈ பூச்சி அழித்தல் குறித்த இலவச செயல் விளக்க துவக்க விழ மூங்கில் புதூர் கிராமத்தில் நடந்தது. செயல்விளக்கத்தை துவக்கி வைத்து டி.ஆர்.ஓ., பிரபாகர் பேசியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40 ஆயிரம் ஹெக்டேரில் மா பயிரிடப்பட்டுள்ளது. தத்துப்பூச்சி, பழ ஈ, மாவுப்பூச்சி மற்றும் தண்டு துளைப்பான் பூச்சிகளால் மா பாதிக்கப்படுகிறது. இதில், அதிகபட்சமாக பழ ஈ முதிர் தருவாயில் உள்ள காய்களை தாக்கி உற்பத்தியில் சுமார் 30 சதவீதம் இழப்பை ஏற்படுத்துகிறது. பழ ஈ யின் தாக்குதல் ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் அதிக அளவில் இருக்கும். இதனால், விவசாயிகளுக்கு பெரும் அதிக அளவில் நஷ்டம் ஏற்படுகிறது. ஏற்கெனவே பல்வேறு காரணங்களால் மா விவசாயிகள் நஷ்டம் அடைந்து வரும் நிலையில் பழ ஈயின் தாக்குதால் மேலும் நஷ்டமடையும் வாய்ப்பு ஏற்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மாவில் பழ ஈயை கட்டுப்படுத்த டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மையம் மற்றும் தமிழ்நாடு அரசு வேளாண் துறையும் இணைந்து ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இலவச செயல் விளக்கம் நடத்தப்படுகிறது. இதற்காக அரசு ஒரு லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மூங்கில் புதூரை தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா சாகுபடி செய்துள்ள அனைத்து வட்டாரங்களில் மா பழ ஈ பூச்சி கட்டுப்படுத்துதல் குறித்த இலவச செயல் விளக்கம் நடத்தப்படவுள்ளது.

மா பழ ஈ பூச்சியை ஒரு ஏக்கரில் ஆறு இனக்கவர்ச்சி பொறி வைக்கப்பட்டு அழிக்கப்படவேண்டும். இவ்வாறு வட்டார அளவில் நடத்தப்படும் செயல் விளக்கத்தின் போது மா விவசாயிகள் தவறாமல் கலந்து கொண்டு பயன் அடையலாம். மா சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மா பழ ஈ பூச்சி கட்டுப்படுத்துவதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் வேளாண் துறை, தோட்டக்கலை துறை, டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மையம் ஆகியவற்றை அணுகி கூடுதல் தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அவர் பேசினார். டாக்டர் பெருமாள் வேளாண்மை மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ் திட்ட விளக்கவுரையாற்றினார். தொழில்நுட்ப வல்லுனர் (மண்ணியல்) குணசேகர்,

வேளாண்மை இணை இயக்குனர் ராஜன், வேளாண்மை பொறியில் துறை செயற்பொறியாளர் அருள்மொழி, கால்நடைதுறை உதவி இயக்குனர் அருண்மொழிதேவன், பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் கோலப்பா பிள்ளை, வேளாண்மை உதவி இயக்குனர்  ரவி, வேளாண்மை அலுவலர் பச்சியப்பன், கிருஷ்ணகிரி ஆத்மா திட்ட தலைவர் மாணிக்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பாசி பயறு சாகுபடிக்கு மானியத்தில் ஜிப்சம்**

ராசிபுரம்: 'மானாவாரியில் இறவைப்பயிராக சாகுபடி செய்யப்படும் பாசி பயறில் அதிக மகசூல் பெற அடியுரமாக ஜிப்சம் இடவேண்டும்' என, ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: ராசிபுரம் பகுதி விவசாயிகள் தற்போது மானாவாரி இறவை பாசி பயறு சாகுபடி செய்கின்றனர். இறவை பாசி பயறு விதைகள் உள்ள விவசாயிகள் திரட்சியான மணிகள் மற்றும் அதிக மகசூல் பெற ஒரு ஏக்கருக்கு 45 கிலோ ஜிப்சம்  டியுரமாக இட வேண்டும். தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 50 சதவீத மானியத்தில் ஒரு ஹெக்டேருக்கு 110 கிலோ வீதம் ஜிப்சம் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் ராசிபுரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மகசூல் அதிகரிக்க மண் பரிசோதனை வேளாண் உதவி இயக்குனர் அறிவுரை**

நாமக்கல்: 'மகசூலை அதிகரிக்க விவசாய நிலத்தின் மண் தன்மையை பரிசோதனை செய்ய வேண்டும்' என, வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:  மகசூலை அதிகரிக்க  மண் பரிசோதனை செய்ய வேண்டும். மண் பரிசோதனை செய்து மண்ணில் உள்ள சத்துக்களின் அளவை தெரிந்து அதற்கேற்ப பயிர்களுக்கு உரமிடுவதன் மூலம் உரச் செலவை குறைத்து மகசூலை அதிகரிக்க முடியும். முதல் பயிர் அறுவடை முடிந்தவுடன் மண் மாதிரி எடுத்தல் நல்லது. வரப்பு ஓரம் மரங்களின் அடியில் எருக்குழி மற்றும் தண்ணீர் தேங்கும் இடங்களில் மண் மாதிரிகள் எடுக்கக் கூடாது. மண் மாதிரி எடுக்கப்படும் இடங்களில் உள்ள காய்ந்த இலை, சருகு புல் போன்றவற்றை  நீக்கிவிட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 10 இடங்களில் வி வடிவத்தில் மண்வெட்டியினால் குழிவெட்டி அந்த மண்ணை கீழிலிருந்து மேலாக கலந்து சேகரித்து, பாலீத்தீன் பைகளில் நிரப்ப வேண்டும்.  மேலும், அதில் விவசாயின் விலாசம், சர்வே எண் அடுத்து சாகுபடி செய்யும் பயிர் ஆகிய விவரங்களை இணைத்து மண் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும். நெல், நிலக்கடலை மற்றும் தானிய பயிர்களுக்கு 15 செ.மீ., ஆழத்திலும், பருத்தி, கரும்பு, வாழை, மரவள்ளி மற்றும் காய்கறி பயிர்களுக்கு 22.5 செ.மீ., ஆழத்திலும் மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழக விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம்**

பெரம்பலூர்: தமிழக விவசாயிகள் சங்கத்தின் பெரம்பலூர், திருச்சி, அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் பெரம்பலூரில் நடந்தது. கூட்டத்துக்கு சங்க மாநில செயலாளர் ராஜாசிதம்பரம் தலைமை வகித்தார். திருச்சி மாவட்ட தலைவர் ரெங்கநாதன், கணேசன், மாவட்ட இளைஞரணி செயலாளர் மாணிக்கம், நீலகண்டன், விஸ்வநாதன் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் பருவமழை பொய்த்து போனதால் சாகுபடி செய்த பயிர்கள் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து கூட்டுறவு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கியுள்ள கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய,

மாநில அரசுகளை கேட்டுக்கொள்வது. 60 வயதுக்கு மேற்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் பாகுபாடு இல்லாமல் நிபந்தனையின்றி ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

தீவன விலை, புண்ணாக்கு விலை, விவசாய கூலி விலை உயர்ந்துள்ள நிலையில் பால் லிட்டருக்கு ஐந்து ரூபாய் உயர்த்தி வழங்கக்கோரி பால் உற்பத்தியாளர்கள் நல சங்கம் வரும் 17ம் தேதி தமிழகம் முழுவதும் நடத்தும் பால் நிறுத்த போராட்டத்துக்கு தமிழக விவசாயிகள் சங்கம் ஆதரவளிப்பது. தமிழக அரசு உத்தரவின்பேரில் விவசாய உபயோகத்துக்காக ஏரி, ஓடைகளில் வண்டல் மண் எடுத்து செல்வதை தடை செய்யக்கூடாது என்றும், கிராமங்களில் ஆட்கள் பற்றாக்குறையால் ஜே.சி.பி., மூலம் விவசாயிகள் வண்டல் மண் அள்ளுவதை அ னுமதிக்க வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்வது.

வெங்காயத்துக்கு கிலோ 15 ரூபாய் என நிர்ணயிக்க வேண்டும், வெங்காயத்தை ஏற்றுமதிக்கும் அனுமதி அளிக்கவும் மத்திய, மாநில அரசுகளை கேட்டுக்கொள்வது, சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலம் நெல் கொள்முதல் செய்யும்போது 40 கிலோ கொண்ட மூடை எடை வைப்பதற்கு இருபது ரூபாய் வசூல் செய்வதை தடுப்பதோடு அரசு நிர்ணயம் செய்த கூலியில் எடை வைக்கவும், எடை போடும் மூடைகள் 60 கிலோ மூடையாக முன் போலவே எடை போடவும் நடவடிக்கை எடுத்திட தமிழக அரசை செயற்குழு கேட்டுக்கொள்வது.

பெரம்பலூர் சர்க்கரை ஆலையை புனரமைக்க எத்தனால் உற்பத்தி இணைமின் உற்பத்தி திட்டங்களை செயல்படுத்த ஆலையை நவீனப்படுத்த மூலதனம் ஆகியவற்றிற்கு கரும்பு விவசாயிகளிடம் ஏற்கனவே பெறப்பட்ட 7.87 ரூபாய் கோடியில் விவசாயிகளுக்கு திருப்பி தரப்பட்ட 2.37 கோடி ரூபாய் போக மீதமுள்ள 5.50 கோடி ரூபாய் தவிர மேற்கொண்ட வரும் ஆண்டுகளில் விவசாயிகள் அனுப்பும் கரும்பு தொகையில் எந்த விதமான பிடித்தமும் செய்யாமல் அரசே பங்குத்தொகை முழுவதையும் அளித்து ஆலையை புனரமைக்க வேண்டுமென்று செயற்குழு கேட்டுக்கொள்வது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**காய்கறி, பழங்கள் விலை உயர்வு**

சிவகங்கை: வரத்து இல்லாததால் சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி, பழங்கள் விலை உயர்ந்துள்ளது. நேற்றைய சந்தை நிலவரம்: கடந்த வாரம் 74 ரூபாய்க்கு விற்ற துவரம் பருப்பு, தற்போது 76 ரூபாய்; 46 க்கு விற்ற தட்டப்பயறு 48; 50 க்கு விற்ற கடலை பருப்பு 52; 67 க்கு விற்ற உளுந்தம் பருப்பு 70; 38 க்கு விற்ற கொண்டக்கடலை 41; 29 க்கு விற்ற பாசிப்பருப்பு 26; 68 க்கு விற்ற மல்லி 70; 70 க்கு விற்ற வத்தல் 65; 65க்கு விற்ற மலை பூண்டு 75.வரத்து குறைவு: நாட்டு காய்கறிகள் தவிர பிற காய்கள் வெளி மாவட்டங்களில் இருந்து வருகின்றன. வரத்து குறைவால் விலை அதிகரித்துள்ளது.

விலை நிலவரம் (கிலோ): கத்தரி,வெண்டைக்காய், தக்காளி, மாங்காய், உருளை கிழங்கு, பீன்ஸ், முட்டை கோஸ், பீட்ரூட், சின்ன வெங்காயம்- 20 ரூபாய்; கேரட் 30; பெல்லாரி வெங்காயம் 15; நூக்கல் 30; முள்ளங்கி 16; பாகற்காய், சேப்பங்கிழங்கு, சேணை, அவரை, கருணை, இஞ்சி, பச்சை மிளகாய்- 40; பட்டர் பீன்ஸ், சோயா- 60; காலிபிளவர் 24; சவ்சவ் 16; எலுமிச்சை 40.பழங்கள் (கிலோ): ஆப்பிள் முதல் ரகம் 120, இரண்டாவது ரகம் 100; மாதுளை 80, இரண்டாவது ரகம் 60; சாத்துக்குடி, ஆரஞ்சு 50; திராட்சை 60, இரண்டாவது ரகம் (பன்னீர்) 40; கொய்யா 30; சப்போட்டா 20; அண்ணாசி பழம் 30, சப்பட்டை மாம்பழம் 60, காசா லட்டு 40, பாலாமணி 50 ரூபாய்.

**பயிர்காப்பீட்டு திட்ட இழப்பீடு வழங்க கோரி கோவில்பட்டியில் காலவரையற்ற உண்ணாவிரதம் : விவசாயிகள் சங்கம் முடிவு**

---

தூத்துக்குடி : மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்ட பயிறு வகைகளுக்கு பயிர்காப்பீட்டு திட்ட இழப்பீடு கிடைக்கும் வரை கோவில்பட்டி ஆர்டிஓ., அலுவலகம் முன்பு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடக்கிறது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க தூத்துக்குடி மாவட்டகுழுக் கூட்டம் தூத்துக்குடியில் விளாத்திக்குளம் தாலுகா விவசாயிகள் சங்கத் தலைவர் வீரசின்னு தலைமையில் நடந்தது. சிபிஐ., மாவட்டச் செயலாளர் மோகன்ராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., அய்யலுசாமி, ஏஐடியுசி., மாவட்டத் தலைவர் அழகுமுத்துபாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், 2008-09ம் ஆண்டில் பாசி, உளுந்து பயறு வகைகள் மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்டு விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. அந்த ஆண்டு மாவட்டத்தின் வடபகுதியில் உள்ள கோவில்பட்டி, எட்டயபுரம், விளாத்திக்குளம் மற்றும் ஓட்டப்பிடாரம் தாலுகாவைச் சேர்ந்த விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ் தொகை கட்டியிருந்தார்கள். நோயினால் பாதித்த பயிர்களை விவசாயத்துறையைச் சேர்ந்த அலுவலர்களும், கலெக்டரும் நேரில் பார்வையிட்டு சென்றும் உரிய காலத்தில் இழப்பீடு வழங்கப்படவில்லை.

எனவே பாசி, உளுந்து பயறு வகைகளுக்கு பயிர்க்காப்பீட்டுத் தொகை கட்டிய விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கும் வரை கோவில்பட்டி ஆர்டிஓ., அலுவலகம் முன்பு பாதிக்கப்பட்ட விவசாயிகள் சார்பில் மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் நல்லையா தலைமையில் விளாத்திக்குளம் தாலுகா விவசாயிகள் சங்கத் தலைவர் வீரசின்னு, கோவில்பட்டி தாலுகா விவசாயிகள் சங்க செயலாளர் லெனின்குமார், ஓட்டப்பிடாரம் தாலுகா விவசாயிகள் சங்கத் தலைவர் வன்னியராஜ் மற்றும் சங்கத்தின் முன்னணித் தலைவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம் தொடர முடிவு செய்யப்பட்டது.

மேலும் கடந்த மாதம் சூறாவளி மழையால் பாதிக்கப்பட்ட வாழைகளுக்கு உரிய இழப்பீடு வழங்கவும், மாவட்டத்தின் வடபகுதியில் உள்ள கோவில்பட்டி, எட்டயபுரம், விளாத்திக்குளம், ஓட்டப்பிடாரம் தாலுகாக்களை நடப்பு ஆண்டில் போதிய மழையின்மையால் வறட்சி பகுதியாக அறிவித்து நிலவரி, கடன் வசூல் தள்ளுபடி, வறட்சிநிவாரணப் பணிகள் தொடரவும் வலியுறுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

**கால்நடை பராமரிப்பு விழிப்புணர்வு முகாம்**

சின்னசேலம் : தமிழ்நாடு அரசு கால் நடை பராமரிப்பு துறை, நீர் வளம் நிலவள திட்டம் சார்பில் விழிப்புணர்வு முகாம் தோட்டப்பாடியில் நடந்தது.

சின்னசேலம் அடுத்த தோட்டப்பாடியில் கோமுகி ஆறு உப வடிநிலப் பகுதி விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்புகள் குறித்து விழிப்புணர்வு முகாம் நடந்தது. சென்னை கால்நடை மருத்துவ பல்கலைக் கழக மேல்மருவத்தூர் பயிற்சி மைய பேராசிரியர் டாக்டர் வேங்கடபதி, கள்ளக்குறிச்சி உதவி இயக்குனர் அழகரசம் தலைமை தாங்கினர். கால்நடை மருத்துவர்கள் ராஜன், சீனுவாசன், நடமாடும் கால்நடை உதவி மருத்துவர் பெரியசாமி, குரால் இளம் கால்நடை உதவி மருத்துவர்கள் பிரேம லதா, பாண்டியன், கால்நடை பராமரிப்பு உதவியாளர் செல்லமுத்து ஆகியோர் கால்நடை வளர்ப்பு, செயற்கை முறை கருவூட்டல், மலட்டு நீக் கம், குடல் புழு நீக்கம் மற் றும் நீரினை பயன்படுத்துவது குறித்து விளக்கி பேசினர். ஏரி பாசன சங்க தலைவர் சிவந்தான் நன்றி கூறினார்.

**நெல் சான்று விதை நிறுவனங்களுக்கு கடிவாளம் : வேளாண் துறை அதிகாரிகளுக்கு கேள்வி**

தாராபுரம் : நெல் சான்று விதை நிறுவனங் களுக்கு, வேளாண் துறை அதிகாரிகள் கடிவாளம் போட வேண்டும். முளைப்பு திறனை மட்டுமே வேளாண் துறை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, மகசூலுக்கு உத்தரவாதம் இல்லாத சூழ்நிலையில் விற்க அனுமதிப்பதால், சில தருணங்களில் விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர்.

திருப்பூர் மாவட்டத்தில் உடுமலை, மடத்துக்குளம், கணியூர், காரத்தொழுவு, காங்கயம்பாளையம், தளவாய்பட்டணம், அலங்கியம், தாராபுரம், கொளிஞ்சிவாடி, பெரமி யம், வெள்ளகோவில், முத்தூர் உட்பட அமராவதி பழைய, புது ஆயக்கட்டு பாசன பகுதிகளில் பருவமழை முறையாக பெய்த போது, விவசாயிகள் மூன்று போக நெல் சாகுபடி செய்தனர். தற்போது, ஒரு போகம் நெல் சாகுபடி செய்வதே, சாதனையாக மாறி வருகிறது.

நெல் சான்று விதைகள் தயாரிக்கும் நிறுவனங்கள், விவசாயிகளிடம் நெல்லை கொள்முதல் செய்து கடுக்காய்களை நீக்கி, விதைகளாக பக்குவம் செய்கின்றன; விதை சான்று அலுவலர்களின் ஆய்வுக்குபின், விற்பனைக்கு வருகிறது. தமிழ்நாடு வேளாண் பல்கலையோ, நெல் சான்று விதைகளின் முளைப்பு திறனை மட்டுமே எடுத்துக்கொண்டு மகசூலுக்கு உத்தரவாதம் இன்றி விற்பனைக்கு அனுமதிக்கிறது.

சூரியகாந்தி, மக்காச்சோளம், ராகி, கம்பு, சோளம், கரும்பு உட்பட பல்வேறு தானிய விதைகள் உற்பத்தி செய்யும் உள்நாட்டு, பன்னாட்டு கம்பெனிகள், ஒரு கிலோ விதையில் எவ்வளவு மகசூல் கிடைக்கும் என்பதை தெளிவாக குறிப்பிடுகின்றன. நெல் சான்று விதை நிறுவனங்கள், மகசூல் எவ்வளவு என்பதை கூறுவதில்லை. இதை வேளாண் பல்கலை விஞ்ஞானிகளும் கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை. இதனால், நெல் சான்று விதை நிறுவனங்கள் புற்றீசல் போல் அதிகரித்து விட்டன.

இத்தகைய நெல் சான்று விதை உற்பத்தி நிறுவனங்கள், விவசாயிகளிடம் ஒரு கிலோ நெல் ரூ.10க்கு வாங்கி கடுக்காய் நீக்கி விதையாக பக்குவப்படுத்தி ரூ.20 முதல் ரூ.22 வரை அதே விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றன. நெல்லை நடவு செய்து களைக் கொல்லி மருந்து தெளித்து, உரமிட்டு, தண்ணீர் விட்டு, நாற்று நன்றாக வளர்ந்து, நெல் மணிகள் உருவாகும் தருணத்தில், வெறும் பூட்டையாகவும், மணிகளில் பால் பிடிப்பு இல்லாமலும் மலட்டு தன்மையாகி விடுகிறது. இத் தருணத்தில், விவசாயிகளின் நிலை கவலை அளிக்கக்கூடியது.

இப்பிரச்னைக்கு தீர்வு காண, வேளாண் பல்கலை விஞ்ஞானிகள், நெல் சான்று விதை உற்பத்தி நிறுவனங்கள் தயாரிக்கும் விதைகளை முழுமையாக ஆய்வு செய்து, விற்பனைக்கான அனுமதியை வழங்க வேண்டும். மலட்டு தன்மை ஏற்படும் போது, நெல் சான்று விதை உற்பத்தி செய்த நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போது தான் தரமான நெல் சான்று விதைகளை உற்பத்தி செய் வர். கடிவாளம் போடாவிட்டால், மலட்டு தன்மையான நெல் சான்று விதைகள் ஊடுருவும் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து விடும். நெல் சான்று விதைகள் தயாரிக்கும் நிறுவனங்கள், மற்ற விதை நிறுவனங்களை போல், மகசூல் அளவை குறிப்பிட வேண்டும். மலட்டு தன்மையான நெல் விதைகளை கொடுத்து விவசாயிகளை ஏமாற்றும் நிறுவனங்கள் மீது வேளாண் துறை அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் விரும்புகின்றனர்.

**செத்து மிதந்தன ஒரு டன் மீன்கள்**
மே 13,2010,00:00 IST

---



சூலூர்: சூலூர் குளத்தில் ஒரே சமயத்தில் பல ஆயிரம் மீன்கள் இறந்து மிதந்தன. 'அதிக வெப்பம்; ஆக்ஸிஜன் பற்றாக் குறையால் இவை இறந்திருக்கலாம்' எனக் கூறப்படுகிறது. சூலூரில் இரண்டு குளங்களில் பல லட்சம் மீன்கள் வளர்க்கப்படுகின்றன. ஜிலேபி கெண்டை, ரோகு மற்றும் கட்லா ரக மீன்கள் இனப்பெருக்கத் துக்காக விடப்பட்டுள்ளன. இவற்றை குளத்தை ஏலம் எடுத்த குத்தகைதாரர் ஆட்கள் வைத்து வலை போட்டு பிடித்து விற்பனை செய்கிறார். தினமும் ஒரு டன் அளவுக்கு இங்கு மீன்கள் கிடைக்கின்றன. இந்த குளம் 187 ஏக்கர் பரப்பளவு கொண்டது. தற்போது, 70 சதவீத தண்ணீர் நிறைந்துள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலையும், நேற்று காலையும் படகுத் துறை, பொதுமக்கள் குளிக்கும், துணி துவைக்கும் படித்துறை பகுதியிலும், மேற்குப் பகுதி கரையோரமும் பல்லாயிரம் மீன்கள் இறந்து மிதந்து கொண்டிருந்தன. இவை ஏறத்தாழ ஒரு டன் எடை அளவு இருக்கலாம். கரையோரம் நேற்று காலை முதல் ஒதுங்கி வந்த இந்த மீன்கள், துடி துடித்து, தண்ணீருக்கு மேல் துள்ளிக் குதித்தன. இரண்டு நிமிடங்கள் தள்ளாடிய மீன்கள் சுருண்டு விழுந்து பரிதாபமாக இறந்தன.

இது குறித்து மீனவர் சங்க நிர்வாகி ஆறுமுகம் கூறியதாவது: கோடை காலத்தில் குளத்தில் அதிக வெப்பம் தாளாமல் மீன்கள் இறப்பது வாடிக்கையானது. இப்போது மிக அதிகளவிலான மீன்கள் இறந்துள்ளன. இதிலும், ஜிலேபி கெண்டை மீன்கள் மட்டும்தான் இறந்துள்ளன. இவையும் 60 நாட்கள் வளர்ந்த, நூறு முதல் 120 கிராம் எடையுள்ள மீன் குஞ்சுகள் தான். இதே இனத்தில் சிறிய மற்றும் பெரிய அளவிலான மீன்கள் ஒன்று கூட இறக்கவில்லை. இது குறித்து மீன் வளத்துறை அதிகாரிகளுக்கு தகவல் அளித்துள்ளோம். இறந்து போன மீன்கள் மற்றும் ஆகாய தாமரைகளை நாளை (இன்று) மீன் பிடி பணிகளை நிறுத்தி விட்டு முழுமையாக அகற்றுவோம். இறந்த மீன்களை யாரும் எடுத்துச் செல்லாத வகையில் குழி தோண்டிப் புதைக்கப்படும். இவ்வாறு மீனவர் சங்க நிர்வாகி ஆறுமுகம் தெரிவித்தார்.இது குறித்து பொள்ளாச்சி மீன் வளத்துறை ஆய்வாளர் ஜெகநாதன் கூறியதாவது: குளத்தில் தண்ணீர் உள்ள நிலையில், மழை பெய்து புதிதாக தண்ணீர் வந்தால், அதில் ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்பட்டு, அதனால் மீன்களுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்திருக்கலாம். ஒரு இன மீன் மட்டும் இறந்திருப்பதால் அதன் தாய் மீனின் உடலில் உள்ள கோளாறும் காரணமாக இருக்கலாம். குளத்து நீரில் ஆக்சிஜன் பற்றாக்குறையைப் போக்க சுண்ணாம்பு கலந்து விட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மீன் வளத்துறையினர் நேரடியாக ஆய்வு நடத்துவர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தினத் தந்தி

## ஏற்றுமதி விலை உயர்வு எதிரொலி வெங்காயம் ஏற்றுமதி 52 சதவீதம் வீழ்ச்சி



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி 1,06,891 டன்னாக இருந்தது. இது, சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட 52 சதவீதம் குறைவாகும். 2009–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நம் நாட்டில் இருந்து 2,25,026 டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது.
விலை அதிகரிப்பு
உள்நாட்டில் வெங்காயத்தின் விலை உயர்வை தடுத்து நிறுத்திடும் வகையில், மத்திய அரசு, வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை (ஒரு டன்) 250 டாலராக அதிகரித்து நிர்ணயம் செய்தது. அதற்கு குறைவான விலையில் ஏற்றுமதி செய்ய இயலாத நிலையில், வெங்காயம் ஏற்றுமதி சென்ற ஏப்ரல் மாதத்தில் குறைந்து போனது என தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் (நாஃபெட்) தெரிவித்துள்ளது. சென்ற 2009–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஏற்றுமதிக்கான ஒரு டன் வெங்காயத்தின் விலை 200 டாலராக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
நடப்பு 2010–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், வெங்காயம் அதிக அளவில் உற்பத்தியாகும் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஒரு குவிண்டால் வெங்காயத்தின் விலை ரூ.1,741–ஆக மிகவும் அதிகரித்து இருந்தது. ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரித்ததையடுத்து உள்நாட்டில் ஒரு குவிண்டால் வெங்காயத்தின் விலை, மே 7–ந் தேதி அன்று சிறிதளவு குறைந்தது.
நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில், மதிப்பின் அடிப்படையில் வெங்காயம் ஏற்றுமதி ரூ.12,506 லட்சமாக குறைந்து இருந்தது. இது, சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.22,840 லட்சமாக இருந்தது. தற்போது உள்நாட்டுச் சந்தையில் வெங்காயத்தின் விலை குறைந்து உள்ளதையடுத்து நடப்பு மே மாத ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையில் 50 டாலர் குறைக்கபட்டுள்ளது என 'நாஃபெட்' அமைப்பு தெரிவித்துள்ளது.
18.14 லட்சம் டன்
சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் நம்நாட்டின் வெங்காயம் ஏற்றுமதி 18.14 லட்சம் டன்னாக உயர்ந்து உள்ளது. இது, சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில் 17.83 லட்சம் டன்னாக இருந்தது.

நம்நாட்டிலிருந்து, வங்காளதேசம், மத்திய கிழக்கு நாடுகள், சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு அதிக அளவில் வெங்காயம் ஏற்றுமதி மேற்கொள்ளப்படுகிறது.

## இந்திய உணவுக் கழகத்தின் கோதுமை கொள்முதல் 2.4 சதவீதம் சரிவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு கோதுமை சந்தைப்படுத்தும் பருவத்தில் (ஏப்ரல்–மார்ச்) இதுவரையிலான காலத்தில், இந்திய உணவுக் கழகம் 2.10 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்துள்ளது. இது, சென்ற மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த முந்தைய பருவத்தின் இதே காலத்தில் 2.15 கோடி டன்னாக இருந்தது. ஆக, நடப்பு பருவத்தில் இந்த அமைப்பின் கோதுமை கொள்முதல் 2.4 சதவீதம் சரிவடைந்துள்ளது.
40 சதவீதம் அதிகம்
இந்திய உணவுக் கழகம், உணவு தானியங்களை கொள்முதல் செய்து, விநியோகம் செய்யும் மத்திய அரசின் முகமை அமைப்பாகும். இக்கழகம் ஏப்ரல் 13–ந் தேதி வரையிலான காலத்தில் கொள்முதல் செய்த கோதுமை, முந்தைய பருவத்தின் இதே காலத்தை விட 40 சதவீதம் அதிகமாக இருந்தது. எனினும் மே 3–ந் தேதியுடன் நிறைவடைந்த காலத்தில் முதல் முறையாக சரிவு ஏற்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை கோதுமை கொள்முதல் மந்தமடைந்துள்ளது.
எனினும், நடப்பு முழு பருவத்தில், இந்திய உணவுக் கழகத்தின் கோதுமை கொள்முதல் 2.62 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற சந்தைப்படுத்துதல் பருவத்தில் 2.53 கோடி டன்னாக இருந்தது. அப்பருவத்தில் இது ஓர் சாதனை அளவாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
மத்தியபிரதேசம்
தற்போது மத்தியபிரதேசத்தை தவிர, கோதுமை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் பஞ்சாப், அரியானா மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் கோதுமை கொள்முதல் குறைந்துள்ளது. மத்திய பிரதேசத்தில் கொள்முதல் 30.42 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற பருவத்தின் இதே காலத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.
கோதுமை கொள்முதல், உத்தரபிரதேசத்தில் 40 சதவீதமும், அரியானாவில் 7.5 சதவீதமும் சரிவடைந்துள்ளது. நடப்பு பருவத்தில் இதுவரை பஞ்சாப் மாநிலத்திலிருந்து அதிகபட்சமாக 10.08 லட்சம் டன் கோதுமை பெறப்பட்டுள்ளது. எனினும் இங்கு கொள்முதல் 4 சதவீதம் குறைந்துள்ளது. முந்தைய பருவத்தில் இது 10.48 லட்சம் டன்னாக இருந்தது.
கொள்முதல் விலை
சந்தையில் ஏற்றத் தாழ்வுகளால் விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில்

மத்திய அரசு குறைந்தபட்ச ஆதரவு விலையில் (கொள்முதல் விலை) உணவு தானியங்களை விவசாயிகளிடமிருந்து வாங்கிக் கொள்கிறது. நடப்பு கொள்முதல் பருவத்தில் கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.1,100–ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில், கோதுமை உற்பத்தி 8.02 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டு பருவத்தில் 8.06 கோடி டன்னாக இருந்தது.